பக்கங்கள் - 11
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (26.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129







## கொரோனாவின் பலியெடுப்பு 2 இலட்சத்தைக் கடந்தது

(ஜெனிவா)

உலகையே உலுக்கியுள்ள கோவிட் - 19 எனும் கொரோனா தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை கடந்துள்ளது.

இதற்கமைய இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 2 மணியளவில் உலகளாவிய ரீதியில் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 202, 227 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,903, 290 ஆகவும் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 832,203 ஆகவும் உயர்வடைந்துள்ளது. (ம)

### சரியான தடுப்பு நடவடிக்கை எடுக்காவிட்டால்

# கொரோனாவின் வீரியம் பன்மடங்கு அதிகரிக்கும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் காண்டீபன் எச்சரிக்கை



**(யாழ்ப்பாணம்) சரியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் கொரோனா வைரஸின் வீரியம் பன்மடங்காக அதிகரிக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் காண்டீபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெலிசர கடற்படை முகாமிலிருந்து வீடு சென்ற சிப்பாய்கள் கொரோனா தொற்றுக்குள் 02

## கொரோனா பாதிப்பு 452 ஆக அதிகரிப்பு

### நேற்றும் 35 பேர் தொற்றுக்குள்ளாகினர்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 35 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள 02

## கிளிநொச்சியில் இராணுவச் சிப்பாய் திடீரென மயங்கி வீழ்ந்து மரணம்

### கொரோனா பரிசோதனைக்காக இரத்த மாதிரி அனுப்பி வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயபுரம் இராணுவ முகாமில் கடமையில் இருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள் 02

## நாய்க்கும் கொரோனா?

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நாய் ஒன்றுக்கு கொரோனாவைரஸ் தொற்று உள்ளமை 02

### கொரோனா வைரஸுக்கு சிகிச்சையளிக்கும்

## சுகாதாரத் துறையினர் பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிக அவசியம்

### சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மக்களுக்கான சேவையில் ஈடுபடும் போதும் நோயாளர்களை இனங்காணல் மற்றும் சிகிச்சை 02

### தொண்டைமானாறு கடலில்

## வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு



(யாழ்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இலகுநாதன் செந்தூரன், 02

### யாழிலிருந்த 2 ஆயிரம் பேர்

## அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

### அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் இருந்த 2000 பேர் தற்போது 02

### கடற்படையினருக்கு

## நாளொன்றுக்கு 400 சோதனை

(கொழும்பு)

வெலிசர கடற்படைத் தளத்தில் உள்ள கடற்படை வீரர்களுக்கான பி.சி.ஆர் 02

### குடி தண்ணீர் எடுப்பதற்காக

## வீதி வந்த வயோதிபர் மீது பொலிஸார் தாக்குதல்

### சித்தங்கேணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குடி தண்ணீர் எடுக்கச் சென்ற வயோதிபர் ஒருவரை வட்டுகோட்டை பொலி 02

## வீதி வந்த வயோ...

ஸார் மறித்து அவரது தண்ணீர் போத்தலை (கேன்) காலால் உதைந்து, அவர் மீது தாக்கு தல் நடத்திய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் சித்தங்கேணி சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் தண்ணீர் எடுப்பதற்கு முகக் கவசம் அணிந்தவாறு சித்தங்கேணி பிள்ளையார் கோவிலுக்கு சென்றுள்ளார்.

இதன்போது சித்தங்கேணி சந்தியில் கடமையில் இருந்த பொலிஸார் இருவர் அவரை மறித்து விசாரித்துள்ளனர்.

அதன்பின்னர், "நாங்கள் மூன்று மாதம் தண்ணீர் இல்லாமல் இருக்கிறோம் உனக்கு எதுக்கு தண்ணீர்" என கேவலமான தூசன வார்த்தைகளில் அவரை பேசியுள்ளனர்.

இதன்போது வேறு பலரும் அவ் வீதியால் சென்று வந்துள்ளனர்.

அதன்பின்னர் அவர் திரும்பிச் செல்ல முற்பட்டபோது, அவர் கொண்டுவந்த தண்ணீர் போத்தலை (கேன்) காலால் உதைந்து வீழ்த்தி அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்பின்னர் பொலிஸார் உதைந்த தண்ணீர் (கேனை) போத்தலை எடுத்துக் கொண்டு தண்ணீர் எடுக்காது அவர் திரும்பிச் சென்றார்.

இதேவேளை மதுபோதையில் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## சுகாதாரத் துறை...

யளிக்கும் போதும் சுகாதார சேவையாளர்கள் முறையான பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைரஸ் ஒழிப்பிற்காக மக்களுக்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் நோயாளர்களை இனங்காணுதல் மற்றும் சிகிச்சையளித்தல் என்பவற்றின் போது சுகாதாரத் துறையினர் முறையான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இதுவரையில் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைவரம் இதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துகின்றது.

நபர்களுடன் செயலாற்றியதன் பின்னர் அவர்களில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் மற்றும் தொற்றுக்கு உள்ளாகாதவர்கள் என வேறுபடுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தொற்றுக்குள்ளானோருக்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உதாரணமாக அண்மையில் மருதானையில் இனங்காணப்பட்ட பெண் தொடர்பில் வைத்தியர்கள் மிகுந்த அவதானம் செலுத்தினர்.

அவரது வசிப்பிடம் முதற்கொண்டு அனைத்தும் சுகாதார அதிகாரிகளாலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அவர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் அனைத்து சுகாதாரத்துறை ஊழியர்களும் எந்நேரமும் பாதுகாப்பு ஆடைகளை அணிந்திருத்தல் அத்தியாவசியமானதாகும்.

இதன்மூலம் சிகிச்சையளிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சுகாதாரத்துறையினர் பாதிக்கப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும் என்றார். (ம)

## நாய்க்கும்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்த தகவலை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் மறுத்துள்ளது.

ஜாஎல - சுதுவெல்ல என்ற இடத்தில் உள்ள நாய் ஒன்றுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை பரி சோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஊடகங் களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் மேல் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறை பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என்பன மறுத்துள் ளன.

இதேவேளை, கோவிட் - 19 தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை வெளியிடும் அதிகாரம் உள்ளோரில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்கவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கிளிநொச்சியில்...

ளார்.

அநுராதபுரத்தை சேர்ந்த 26 வயதுடைய இராணுவ சிப்பாயே மேற்படி உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு கடமையில் இருந்துள்ளார். திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக இவரின் இரத்த மாதிரிகள் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம-9,316)

## வலி.கிழக்கு...

கடலிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இலகுநாதன் செந்தூரன், நேற்றுமுன் தினம் மாலை முதல் காணாமல்போன நிலையில் தொண்டைமானாறு கடலில் நேற்று அதிகாலை அவர் சடலமாக கண்டறியப்பட்டார்.

தொண்டைமானாறு மயிலதனை இந்து மயானத்துக்கு அண்மையாக கடற்கரை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்பதை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் கண்டுள்ளனர்.

அது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அவர்கள் தகவல் வழங்கினர். இரவு 8.30 மணியளவில் அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார், அங்கு காணப்பட்ட மணிப்பையிலிருந்த (பேர்ஸ்) தேசிய அடையாள அட்டையை வைத்து இலகுநாதன் செந்தூரன் (வயது - 37) என்பவருடையது என்று உறுதி செய்தனர்.

சம்பவம் தொடர்பில் செந்தூரனின் வீட்டுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் உறவினர்கள், செந்தூரனின் நண்பர்கள் சகிதம் தொண்டைமானாறு பகுதியில் அவரைத் தேடினர்.

இந்த நிலையில் அவரது உடைமைகள் மீட்கப்பட்ட பகுதியிலிருந்து அண்மையாக உள்ள கடலில் செந்தூரன் சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை நீதிவானின் உத்தரவில் அவரது சடலம் மந்திகை வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் நேற்று முற்பகல் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

"சடலத்தின் கழுத்து உட்பட உடலில் எந்தவொரு அடிகாயமும் இல்லை. கடல் விலங்குகளால் சடலத்தில் காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முகத்தில் உரசல் காயம் காணப்படுகிறது.

நுரையீரல் பெரியளவில் வீக்கமடைந்துள்ளது. அதனால் அவரது இறப்பு நீரில் மூழ்கி இடம்பெற்றுள்ளது என்று சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செந்தூரன் மண்கும்பானைச் சொந்த இடமாகக் கொண்டதுடன் முன்னாள் போராளியுமாவார். (ம-60)

## நாளொன்றுக்கு...

பரிசோதனையை கடற் படை விரைவுபடுத்தியுள்ளது.

வெலிசர கடற்படைத் தளத்தில் உள்ள கடற்படை வீரர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதி பூரணமாக முடக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு 400 பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ள கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த இலங்கை கடற்படை ஏற்கெனவே உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதால், இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் அடையவோ, கவலையடையவோ வேண்டாம் எனவும் கடற்படைத் தளபதி கேட்டுக் கொண்டார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய கடற்படை வீரர்களிடம் கவனம் செலுத்தல், விடுமுறையில் சென்றிருந்தவர்களை மீள அழைத்தல் ஆகிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை கடற்படை நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், 4 ஆயிரம் கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் (194 திருமணமான குடியிருப்புகள்) வெலிசர கடற்படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அவர்களின்...

அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக கடந்த மாதம் திடீர் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதனால் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த பலர் யாழ் மாவட்டத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டு வரும் நிலையில் இவர்கள் கட்டம் கட்டமாக அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இதுவரை 5300 பேர் தமது பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். 2000 பேர் கடந்த 2 நாட்களில் அனுப்பப்பட்டனர். ஏனையவர்கள் இனிவரும் நாட்களில் அனுப்பப்படவுள்ளனர்.

இதில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள 4 மாவட்டங்களை தவிர ஏனைய மாவட்டங்களில் வசிப்பவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழுடன் தமது மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## கொரோனாவின்...

ளாகி வருவதனால் அவர்கள் விடுமுறையில் சென்ற மாவட்டங்கள் நான்கு புதிதாக இணைந்து மொத்தமாக கொரோனா தொற்று இன்று 20 மாவட்டங்களாக உயர்வடைந்துள்ளது.

இதில் திருகோணமலை, மாத் தளை, மொனராகலை, அநுராதபுரம் ஆகியன இணைந்துள்ளன. இதனால் இலங்கையில் கொரோனா தொற்றில்லா பகுதி (sterile area) சுருங்கி வருகின்றது.

மேலும் இத் தொற்றானது சிப்பாய்களுக்கு பரவியது போன்று சுகாதார சேவையில் ஈடுபடுவர்களுக்கும் தொற்றுவதற்கு அதிக அளவிலான ஆபத்து உள்ளது.

ஊரடங்கு நீக்கப்பட்டுள்ள வடமாகாணத்தில் மக்கள் வைத்தியசாலைக்கு வருவது அதிகரித்து உள்ளது. அத்துடன் மீண்டும் வைத்தியசாலையினை பழைய நிலையில் இயக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றறிக்கையின் மூலம் கேட்டுள்ளார். ஆயினும் அவ்வாறு சேவைகளை விஸ்தரிக்க பல வைத்தியசாலைகளில் இன்னமும் முகக்கவசம், தனி நபர் பாதுகாப்பு அங்கிகளுக்கு பற்றாக்குறை உள்ளது.

நோயாளிகள் வரும்போது சரியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நோயாளிகளிடம் இருந்து சுகாதார பணியாளருக்கு கொரோனா தொற்றலாம் என சுகாதார சேவைகளில் ஈடுபடுவர்களுக்கு ஒரு அச்சம் உள்ளது.

இத்தகைய நிலையில் நாங்கள் எமது பரிசோதனைகளை பல்வேறுபட்டவர்களுக்கு விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சொன்னால் பின்வரும் வகையினருக்கு இப்பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும்.

1. நாளாந்தம் ஏற்படுகின்ற சந்தேகத் திற்குரிய தொற்றாளர்களுக்கு சோதனை செய்தல்.
2. உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களிற்கு மீண்டும் சோதனைகளை செய்தல்.
3. ஆரம்ப பரிசோதனையில் தொற்றில்லை என கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு சோதனைகளை மீண்டும் மீண்டும் பரிசோதனைகளை செய்தல்
4. தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளுடன் நேரடி தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களை சோதனை செய்தல்.
5. தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு சமூகத்திற்கு இணைக்கப்பட முன்னர் சோதனைகளை மேற்கொள்ளல்
6. வெளிநாட்டிலிருந்து வருகை தந்த சகல தரப்பினரையும் சோதனை செய்தல். (முதல் தொடர்புள்ளவர்கள் - யாழ்ப்பாணத்தில் 1200 பேர்)
7. கொரோனா தொற்று அறிகுறிகளை காட்டுகின்ற சுகாதார சேவைகள் பணியாளர்கள் மற்றும் இராணுவம் உள்ளிட்ட தொற்றுக்குள்ளாக கூடிய அபாயம் உள்ளவர்களுக்கு சோதனை செய்தல்.

இவ்வாறு சோதனை செய்ய வேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் நாங்கள் ஒரு நாளைக்கு 1500 வரை பரிசோதனைகளை கூட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தனியார் துறையினால் 400 பேருக்கும் அரசாங்கத்தின் பரிசோதனை நிலையங்களில் 1000 பேருக்கும் செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையினால் வடமாகாணத்திலும் இப்பரிசோதனைகளை மேற்குறிப்பிட்டவர்களுக்கு அதிகரிப்பதற்கு சுகாதார அதிகாரிகள் தங்கள் கவனத்தை செலுத்துமாறும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தேவையான முகக்கவசம், தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை தொடர்ச்சியாக வழங்குவதையும் உறுதி செய்யவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கொரோனா பாதிப்பு...

னர்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 452 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

நேற்றைய தினம் மாத்திரம் 35 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாத்திரம் 49 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கொரோனா தொற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 327 பேர் மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்றுக் குள்ளானோரில் 118 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் நேற்று 27 பேருக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில், நேற்று மேற்கொள் ளப்பட்ட கொரோனா தொற்று பரிசோதனை யில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று 27 பேருக்கான கொரோனா வைரஸ் பரிசோதனை யாழ் மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என யாழ் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உறுதிப் படுத்தியுள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் - 4 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்த - 4 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த - 10 பேர், புதுக் குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த - ஒருவர், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள - 5 பேர், கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலை யத்தில் உள்ள - 3 பேர் என 27 பேர் நேற்று பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். (ம)

# பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் கல்வி நிறுவனங்கள் திரையரங்குகள்

## மறு அறிவித்தல்வரை மூடப்படும்

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புகள், ஏனைய கல்வி நிறு வனங்கள் மற்றும் திரையரங்குகள் மீண் டும்அறிவிக்கும்வரை மூடப்பட்டிருக்க வேண்டும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கபட்டுள்ளது. அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற் றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊர டங்கு சட்டம் மே மாதம் 4ஆம் திகதி திங்கள் அதிகாலை 5 மணி வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். (ம)

# யாழ் நகரில் கலாச்சார சீரழிவு இடம்பெற்றதாக கூறப்பட்டவீடு சுற்றிவளைப்பு

## வெளிமாவட்டத்தை சேர்ந்த இரு பெண்கள் உட்பட மூவர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் உள்ள வீடொன்றில் கலாசார சீரழிவு இடம்பெற்ற தாக தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று இரவு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இருவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

பின்னர் அங்கிருந்த இரு பெண்களை யும் ஆண் ஒருவரையும் அந்த வீட்டிலையே தனிமைப்படுத்த பொலிஸார் மற்றும் பொதுசுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் மனோகரா தியேட்டருக்கு அண்மையாகவுள்ள வீடொன்றி லேயே அண்மைக்காலமாக கலாசார சீரழிவு இடம்பெற்று வந்த நிலையில் அயலவர் களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டை நேற்று இரவு 7.45 மணியளவில் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இருவரையும் விசாரணைக்கு உட்படுத்தினார். அத்துடன் அங்கு விடுதி நடத்தி வந்தவரையும் பொலிஸார் விசா ரணை நடத்துகின்றனர்.

அதன்போது அங்கிருந்தவர்கள் விசா ரணைகளின் போது தொடர்ந்து முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியுள்ள னர்.

இதனால் நேற்றைய தினம் இருவரும் குறித்த வீட்டிலையே தனிமைப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் அவர்களை தனிமைப் படுத்தல் முகாமுக்கு அனுப்ப நடவடிக்கை களை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (ம)

# ஊரடங்கை மீறிய 37,572 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்று பரவுவரைதத் தடுப்பதற்காக மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை அமுல் படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறிய 37,572 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். அத்துடன், 9,650 வாகனங்களும் கைப் பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடுமுழுவதும் அமுல் படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறு பவர்களை கைது செய்வதற்கான விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கண்ணீர்க் காணிக்கை




## இலகுநாதன் செந்தூரன்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரும் வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமான இ.செந்தூரன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. செந்தூரன் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்கான அரசியல் பயணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியு டன் இணைந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர்.

உறுதியான தமிழ்த் தேசிய செயற்பாட்டாளரான செந்தூரன் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது தமிழ்ச் சமூகத்திற்கும், எமது கட்சிக்கும் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும். செந்தூரனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர் களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம். தமிழ்த் தேசத்தின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டாளன் செந்தூரனிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக் கையாக்குகின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(C-9534)

## நாடு வழமைக்கு திரும்பும் வரை

# கடற்படையினரது விடுமுறை மறு அறிவித்தல்வரை இரத்து

(கொழும்பு)

அனைத்து கடற்படையினரதும் விடு முறை மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா இதனைத் தெரிவித்துள் ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை வழமைக்கு திரும்பும் வரை விடுமுறை கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அனைத்து கடற்படை வீரர் களும் தமது முகாமிலிருந்து வெளியேறு வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ள படையினருடன் தொடர்பு களை பேணியவர்கள் தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா கூறியுள்ளார்.

குறித்த தகவல்களை அடிப்படை யாகக் கொண்டு அவர்களை தனிமைப் படுத்தி கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (ம)

# ரூ 5 ஆயிரம் கொடுப்பனவு 99 சதவீதம் நிறைவடைந்துள்ளது

## யாழ்.மாவட்ட அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 5ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு 99 சதவீதம் நிறைவடைந் துள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்டத்தில் இதுவரை 808. 79 மில்லியன் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் கொடுப் பனவாக பயனாளிகளுக்கு வழங் கப்பட்டுள்ளது.

அந்தவகையில், சமுர்த்திபயனாளிகள் 76041 பேருக்கும், சமுர்த்தி காத்திருப் போர் பட்டியலிலுள்ள 11000 பேருக்கும், கூலி தொழிலாளர் பட்டியலில் 39473 பேருக்கும், முதியோர் பட்டியலிலுள்ள 21893 பேருக் கும், மாற்றுத்திறனாளிகள் பட்டியலலுள்ள 8165 பேருக்கும், சிறுநீரக தாக்கமுடையோர் 445 பேருக்கும், 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக முறைப்பாடுகளின் அடிப்படை யில் 5038 பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள் ளது. அடுத்துவரும் தினங்களில் குறித்த தொகை வழங் கப்படவுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,9)

# தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தின்படி வீட்டைவிட்டு வெளியில் சென்று வர அனுமதி!

(கொழும்பு)

ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் தேசிய அடையாள அட்டை எண்ணின் அடிப்படையில் அத்தியாவசிய நோக்கங்களுக்காக நபர்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அதன்படி, திங்கட்கிழமைகளில் தேசிய அடையாள அட்டையின் கடைசி எண்ணின் அடிப்படையில் மக்கள் வீடுகளை விட்டு வெளியில் சென்றுவர அனுமதிக்கப்படுவார்கள்.

திங்கட்கிழமைகளில் அடையாள அட்டையின் கடைசி இலக்கம் 1 அல்லது 2 என்ற எண்ணை கொண்டுள்ளவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

செவ்வாய் : 3 அல்லது 4
புதன்கிழமை : 5 அல்லது 6
வியாழக்கிழமை : 7 அல்லது 8
வெள்ளிக்கிழமை : 9 அல்லது 0

ஒருவர் மட்டும் வீட்டை விட்டு வெளியேறி அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவு மற்றும் மருந்துகள் போன்ற பொருட்களை வாங்க வேண்டும்.

இதுபோன்ற பொருட்களை வாங்க, ஒருவர் உள்ளூர் சந்தைக்குச் சென்று அருகிலுள்ள கடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது. (ம)

# கொழும்பு உள்ளிட்ட 4 மாவட்டங்களில் மே 4 வரை ஊரடங்கு நீடிப்பு!

(கொழும்பு)

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம் மாவட்டங்களில், ஊரடங்குச் சட்டம், மே மாதம் நான்காம் திகதி காலை 5.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. முன்னதாக, எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏனைய மாவட்டங்களில், ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதி வரை நாள் தோறும் காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டு இரவு 8 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ம)

### வெலிசர கடற்படை முகாமிலிருந்து

# விடுமுறைக்காக வவுனியாவிற்கு வந்த கடற்படையினரிடம் சோதனை

(கொழும்பு)

வெலிசர கடற்படை முகாமில் இருந்து விடுமுறையில் வந்த வவுனியாவைச் சேர்ந்த கடற்படை வீரரிடம் நேற்று கொரனா தொற்று உள்ளதா என்பதை கண்டறிவதற்கான பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

வெலிசர கடற்படை முகாமில் உள்ள கடற்படை வீரர்கள் சிலருக்கு கொரனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து அம் முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு கொரனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா, மகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த கடற்படை வீரர் ஒருவரும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் குறித்த முகாமில் இருந்து விடுமுறையில் வந்திருந்தார்.

அவரது வீட்டிற்கு சென்ற வவுனியா தெற்கு சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகர்தர்கள் மற்றும் வவுனியா வைத்தியசாலையைச் சேர்ந்த சுகாதார உத்தியோகத்தர்கள் குறித்த கடற்படை வீரரின் வீட்டிற்குச் சென்று இரத்த மாதிரிகளைப் பெற்று அதில் கொரோனா தொற்று உள்ளதா என்ற ஆய்வுக்காக அனுராதபுரத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (ம-250)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 452 | 118 | 07 | 327 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,901,550 | 830,919 | 202,145 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 2,901,550 | +72,724 | 202,145 | +5,046 |
| ஐ.அமெரிக்கா | 946,921 | +21,689 | 53,461 | +1,268 |
| இத்தாலி | 195,351 | +2,357 | 26,384 | +415 |
| ஸ்பெய்ன் | 223,759 | +3,995 | 22,902 | +378 |
| சீனா | 82,816 | +12 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 155,782 | +783 | 5,819 | +59 |
| பிரான்ஸ் | 161,488 | +1,660 | 22,614 | +369 |
| ஈரான் | 89,328 | +1,134 | 5,650 | +76 |
| ஐ.இராச்சியம் | 148,377 | +4,913 | 20,319 | +813 |
| இந்தியா | 26,283 | +1836 | 825 | 45 |

இன்று அதிகாலை 1.00 நிலைவரப்படி

உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற பெரியதும் உண்மையானதுமான நீதிபதி.
– மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாங்கள் வீடுகளில் இருப்போம் என்பதை யாரால் தடுக்க முடியும்

தற்போது நாட்டில் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் கொரோனா தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கானதாகும்.

எனினும் ஊரடங்குச் சட்டத்தை தொடர்ச்சியாக நீண்ட நாட்கள் அமுல்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆக, சட்ட வரையறைகளுக்குள் உட்படாத ஊரடங்குச் சட்டத்தை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நியதிக்குப் பின்னால் நியாயமான காரணம் உள்ளது என்பதுதான் உண்மை.

அதாவது உலகை உலுப்பி நிற்கின்ற கொரோனா தொற்றைத் தடுப்பதாக இருந்தால், மக்கள் வீடுகளுக்குள் இருப்பதுதான் ஒரே வழி.

எனவே நோய்த் தொற்றிலிருந்து எங்களைக் காப்பாற்றுவதற்கான வழிமுறையை நாம் பின்பற்றுவது மிகவும் அவசியமானது.

இருந்தும் வடபகுதியைப் பொறுத்தவரை கொரோனா நோய் அபாயம் குறித்த விழிப்புணர்வு நம்மிடம் போதாமல் உள்ளதோ என்று எண்ணுமளவுக்கு மக்களின் நடமாட்டம் உள்ளது.

இங்கு ஊரடங்கு என்பது குண்டு வெடிப்புச் சம்பவம் சார்ந்து அல்லது வேறு தாக்குதல் சம்பவங்கள் காரணமாக அமுல்படுத்தப்படவில்லை.

மாறாக, கொடிய கொரோனா நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகவே ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

அதேநேரம் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு ஊரடங்கு தளர்த்தப்படுகையில், வீடுகளுக்குள் இருக்கும் அனைவரும் வெளியில் வருவதாக இருந்தால் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தால் எந்தப் பயனும் ஏற்பட மாட்டாது.

ஆக, ஊரடங்குத் தளர்வின் போது சுய கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதுதான் இங்கு முக்கியமானது.

எனினும் கொரோனாத் தொற்று எங்களுக்கு ஏற்படாது என்பது போல வட பகுதி மக்கள் நடந்து கொள்வதைப் பார்க்க முடிகிறது.

இறை நம்பிக்கை, தன்னம்பிக்கை என்பன முக்கியமாயினும், நோய்த் தொற்று ஏற்படுகின்ற வழிமுறைகளை அறிந்து அதற்குரிய தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது எல்லாவற்றையும் விட அவசியமானது.

எனவே ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் எல்லோரும் வீதிக்கு வருவது என்பதை விடுத்து வீடுகளில் இருப்போம் என்று நாமே நமக்குச் சட்டம் போட்டு அதனை நடைமுறைப்படுத்துவோமாக இருந்தால், தங்களைக் கட்டுப்படுத்தி கொரோனாவில் இருந்து தப்பித்துக் கொண்டவர்கள் என்ற பெருமை உலகில் நமக்குரியதாகும்.

தவிர, வடபகுதியில் கொரோனாத் தொற்று; கட்டுப்பாட்டில் இருந்தாலும் இலங்கையில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து அபாய எச்சரிக்கை செய்கிறது.

ஆகையால் சுய கட்டுப்பாட்டை நமக்கு நாமே விதித்துக் கொள்வோமாக.

# பணம், அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியாத உலகளாவிய தொற்று நிலைமை கொரோனா

## ரம்ழான் மாத செய்தியில் பிரதமர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கொடிய கொரோனா வைரஸ் என்பது பணத்தினாலோ அல்லது அதிகாரத்தினாலோ கட்டுப்படுத்த முடியாத உலகளாவிய தொற்று நிலைமையாகும். இந்தத் தொற்று நிலைமை காரணமாக அனைத்து முஸ்லிம்களும் சமய, கலாசார, சமூக ரீதியாகப் பல சவால்களுக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளனர்.

எனவே, இந்த வருடம் ஏனைய வருடங்களை விடவும் வித்தியாசமானதாக அமையும். இதன்போது அனைத்து உயிர்களையும் பாதுகாப்பதே உங்களது பொறுப்பும் கடமையுமா கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

புனித ரம்ழான் மாதத்தை முன்னிட்டு அவர் விடுத்த செய்தியில்,

உலகெங்கும் வேகமாகப் பரவிவரும் கொவிட் - 19 தொற்று காரணமாக முழு உலகும் பாரிய பிரச்சினையை எதிர் நோக்கியுள்ள சந்தர்ப்பத்திலேயே இம்முறை முஸ்லிம்கள் மிகவும் விமர்சையாகக் கொண்டாடும் நோன்புப் பெருநாளுக்கு முன்னரான நோன்பு நோற்கும் காலம் ஆரம்பிக்கிறது.

கொரோனா வைரஸ் என்பது பணத்தினாலோ அல்லது அதிகாரத்தினாலோ கட்டுப்படுத்த முடியாத உலகளாவிய தொற்று நிலைமையாகும். இந்தத் தொற்று நிலைமை காரணமாக அனைத்து முஸ்லிம்களும் சமய, கலாசார, சமூக ரீதியாகப் பல சவால்களுக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளனர்.

எனவே, இந்த வருடம் ஏனைய வருடங்களை விடவும் வித்தியாசமானதாக அமையும். இதன்போது அனைத்து உயிர்களையும் பாதுகாப்பதே உங்களது பொறுப்பும் கடமையுமாகும்.

அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் இடம்பெறுவதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர். அத்துடன் முஸ்லிம்கள் இந்த ரம்ழானுடைய காலத்தில் சுய கட்டுப்பாட்டுடன், பொறுமையை வளர்த்துக் கொண்டு பிறரின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.

வறிய மக்களின் பசி, கஷ்டங்கள் உட்பட அனைத்து இன்னல்களையும் அதே போன்று அனுபவித்துணர்ந்து, ஆன்மீகப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதே ரம்ழான் கால நோன்பின் நம்பிக்கையாகும் என்பதை நாம் அறிவோம்.

அந்தத் தன்னலமற்ற குறிக்கோளை மென்மேலும் மேம்படுத்தும் வகையில் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, நாம் அனைவரும் நாடு என்ற வகையிலும், உலகம் என்ற வகையிலும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடியை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது.

இதன்போது தன்னையும், தனது குடும்பத்தையும் பாதுகாத்து இந்தச் சவாலை வெற்றிகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதே அனைவரினதும் கடமைப் பொறுப்பாக காணப்படுகிறது.

இன்று உலகம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடவுள் நம்பிக்கை வழங்குகின்ற ஆன்மீக எதிர்பார்ப்பு மற்றும் பலத்திற்கான தேவையைக் கொண்டுள்ளது.

எனவே உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம்களின் ஆசிர்வாதம் மற்றும் பிரார்த்தனையுடன், உங்களதும் நாட்டு மக்களினதும் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ரம்ழான் காலத்தில் வீடுகளில் இருந்தவாறே சமய வழிபாடுகளில் ஈடுபடுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இந்த ரம்ழான் மாதம் அனைத்து முஸ்லிம்களுக்கும் பக்தி மிகுந்ததாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துரைப்பதை எதிக்கட்சியினர் தவிர்க்க வேண்டும்

## சுமந்திரன் மீது மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை சமூகத்தின் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளது. எனவே அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துரைப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என மகிந்த அணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது வரவேற்கப்பட்டது.

இதுவரையில் 74 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு 5000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. நிவாரணம் கிடைக்கப் பெறாதவர்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக இந்நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்போது அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டம் பொதுச் சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்டதாவது ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

அரசியலமைப்புக்கு முரணாக ஜனாதிபதி செயற்படுகின்றார் என எதிர்த்தரப்பினர் குறிப்பிடுவது தவறான கருத்தாகும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான திகதி குறிப்பிட்டமை அனைத்தும் அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே காணப்பட்டது.

பொதுத்தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியோ, அரசாங்கமோ தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்பட்டே தீர்மானங்களை எடுக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்வோரின் உடல் வெப்பநிலையை அளவிட நடவடிக்கை

(ஏறாவூர்)

அரசாங்கத்தின் அறிவுறுத்தல் களுக்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களுக்கு சமுகமளிக்கும் பொது மக்களினதும் அரச உத்தியோகத்தர்களினதும் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் கலாமதி தெரிவித்தார்.

இதற்கமைய மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் பயன்படுத்துவதற்காக வெப்ப அளவீட்டுக் கருவிகள் மாவட்டச் செயலாளரால் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் வைத்து அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

மேலும், கொரோனா வைரஸ் பரவாமலிருக்க சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களையும் அரசால் வழங்கப்படும் அறிவுறுத்தல் களையும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அதை மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்குரியது எனவும் மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# இந்தியாவிலிருந்து 166 மாணவர்கள் நேற்றுக்காலை இலங்கை திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 166 மாணவர்கள் நேற்றுக்காலை இலங்கை திரும்பினர்

கொவிட் - 19 (கொரோனா) தொற்றுநோய் பரவல் அச்சத்தின் மத்தியில் இந்தியா மும்பை நகரிலிருந்த இலங்கை மாணவர்கள் 166 பேர் நேற்றுக்காலை நாட்டுக்கு வரவழைக்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து சர்வதேச ரீதியான விமானப்பயணங்கள் இடைநிறுத்தப்பட்டன.

இதன் காரணமாக வெளிநாடுகளில் கல்வி கற்கும் இலங்கை மாணவர் களுக்கு நாடு திரும்ப முடியாத நிலையேற்பட்டது.

இந்நிலையில் அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் 143 எனும் இலக்க விமானத்தில் இந்தியா மும்பை நகரில் தங்கியிருந்த 166 மாணவர் கள் நேற்றுக்காலை கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

குறித்த மாணவர்கள் அனைவரும் கொரோனா தொற்றுநோய் உள்ளதா? என்ற பரிசோதனைகளை முன்னெடுக்கும் விதத்தில் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஒரேநாளில் 2 ஆயிரம் பேர் உயிரிழப்பு கொரோனாவால் திணறுகிறது அமெரிக்கா

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் ஒரே நாளில் சுமார் 200 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்குக் கொரோனா வைரஸ் பரவியது. தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.



சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் கொன்று குவித்து வருகிறது. வைரஸ் பரவியவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் உலகளவில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.



இந்நிலையில் நேற்று நண்பகல் நிலவரப்படி, அந்நாட்டில் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 38 பேருக்கு வைரஸ் பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 38 ஆயிரத்து 764 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வைரஸ் பரவியவர்களில் இது வரை ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 432 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர்.

இதேவேளை, வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் ஆயிரத்து 951 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆயிரத்து 185 ஆக அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா வைரஸ் பரவலை சூரியஒளி, வெப்பம் குறைக்கும்

### அமெரிக்க ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் பரவலை சூரிய ஒளியும் வெப்பமும் ஈரப்பதமும் குறைக்கும் என்று அமெரிக்கா நடத்திய ஆராய்ச்சியில் தெரியவந்தது.

உலகையே கதிகலங்க வைத்து வருகிற கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ், இதுவரை உலகளவில் 28 இலட்சத்துக்கும் அதிகமானோரை தாக்கியிருக்கிறது. பலி எண்ணிக்கை 2 இலட்சத்தை நெருங்கி வருகிறது.

இந்தக் கொடிய வைரஸை ஒழிக்க என்ன வழி என்று உலகமெங்கும் உள்ள விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத்துறையின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப .யக்குநரகம் ஒரு ஆராய்ச்சியை நடத்தியது.

அந்த ஆராய்ச்சியின் முடிவுகளை வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் கடந்த வியாழக் கிழமை ஜனாதிபதி ட்ரம்ப் முன்னிலையில் உள்நாட்டு பாதுகாப்புத் துணை அமைச்சர் பில் பிரையன் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது,

சூரிய ஒளி மற்றும் ஈரப்பதத்தில் வெளிப்படுகிறபோது கொரோனா வைரஸ் அதிவேகமாக இறக்கிறது. நேரடி சூரிய ஒளியில் கொரோனா வைரஸ் மிக விரைவாக இறக்கிறது. ஐசோபுரொபைல் ஆல்கஹால் கொரோனா வைரஸை 30 விநாடிகளில் கொல்லும்.

பூமியின் மேற்பரப்பிலும் காற்றிலும் கொரோனா வைரஸ் இருக்கிறபோது, அதை சூரிய ஒளி கொல்லும் என்பது எங்களது ஆராய்ச்சியின் மிக முக்கிய சக்திவாய்ந்த தாக்கமாக அமைந்துள்ளது.

மேலும் அதிக வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் ஆகிய இரு நிலைகளுமே கொரோனா வைரஸுக்கு சாதகமற்றவையாகும்.

கோடை போன்ற சூழ்நிலைகள், கொரோனா வைரஸ் பரவுவதைக் குறைக்கப்போகின்றன என்று நாங்கள் அறிந்திருக்கின்றோம். இது நாங்கள் (ஆராய்ச்சியில்) முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்பாக அமையும்.

95 டிகிரி பாரன்ஹீட் அல்லது 35 டிகிரி செல்சியஸுக்கு அதிகமான வெப்ப நிலையும், ஈரப்பதமும் கொரோனா வைரஸின் ஆயுள்காலம் 18 மணி நேரம் என்பதைப் பாதியாக குறைக்கிறது என்று ஆராய்ச்சியில் தெரியவந்தது.

கொரோனா வைரஸ் சூரிய ஒளியில் வெளிப்படுகிறபோது, 75 டிகிரிக்கு மேல் வெப்ப நிலை நிலவி, ஈரப்பதம் 80 டிகிரி அளவுக்கு இருந்தால், வைரஸானது சில நிமிடங்களில் இறந்து விடும்.

அதே நேரத்தில், இந்தக் கண்டுபிடிப்புக்களால் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் உள்ளிட்ட எந்த விதிமுறை தொடர்பாகவும் நான் புதிய பரிந்துரைகளைக் கூறவில்லை. செய்யவும் இல்லை.

கொரோனா வைரஸ் பரிமாற்றம் தொடரில், அறியப்படாத பல தொடர்புகள் இருக்கின்றன. நாங்கள் கூறுகின்ற இந்த யோசனை கொரோனா வைரஸுடன் தொடர்புடைய ஆபத்தை குறைக்கிற நடைமுறை முடிவு எடுப்பதை ஆதரிக்கும் என்று நம்புகின்றோம்.

எங்கள் துறையினர் தயாராகவுள்ள கிருமி நாசினிகளைப் பரிசோதித்து வருகின்றோம். ப்ளிச்சை (சுத்தப்படுத்துவதற்கான ஒரு வகை இரசாயனம்) பரிசோதித்தோம்.

ஐசோபுரொபைல் ஆல்கஹாலை சோதித்தோம். குறிப்பாக உமிழ்நீர் (எச்சில்) மற்றும் சுவாச திரவங்களில் இருப்பதைச் சோதித்தோம்.

இதில் ப்ளிச்சானது கொரோனா வைரஸை 5 நிமிடங்களில் கொல்கிறது. ஆனால் ஐசோபுரொபைல் ஆல்கஹால், 30 விநாடிகளில் கொரோனா வைரஸை கொல்கிறது.

பிற கிருமிநாசினிகளில், குறிப்பாக உமிழ்நீரில் உள்ள கொரோனா வைரஸை நாங்கள் பார்க்கின்றோம்.

எங்கள் ஆராய்ச்சியில், கொரோனா வைரஸ் பரவுதலைப் பொறுத்தமட்டில், தொடர்பு சங்கிலியில் பலவீனமான தொடர்புகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அவை வெப்பம் மற்றும் ஈரப்பதம் ஆகும். சூரிய ஒளியிலுள்ள புற ஊதாக்கதிர்களும் அந்த வரிசையில் சேரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 24 மணிநேரத்தில் 1429 புதிய நோயாளிகள்

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு 24 ஆயிரத்தைத் தாண்டியது!

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது. சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க ஊரடங்கு உத்தரவு. நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வைரஸ் பரவுவதில் அதிவேகம் இல்லை என மத்திய அரசு கூறியிருப்பது ஆறுதல் அளிப்பதாக இருந்தாலும், புதிய நோயாளிகளின் எண்ணிக்கை உயர்வது கவலையளிப்பதாக உள்ளது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்தைத் தாண்டியது. மொத்தம் 24,506 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை நேற்றுக்காலை 9 மணியளவில் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 1429 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 57 பேர் மரணம டைந்தனர். இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 775 ஆக உயர்ந்தது. 5063 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தில் வைரஸ் பரவும் வேகம் அதிகரித்தது. அங்கு 6817 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 301 பேர் உயிரிழந்தனர். குஜராத்தில் 2815 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 127 பேர் உயிரிழந்தனர். தலைநகர் டில்லியில் 2514 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 53 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



## 20 ஆயிரத்தை நெருங்கும் உயிரிழப்பு அதிர்ச்சியில் உறைந்தது இங்கிலாந்து

(லண்டன்)

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன்தினம் ஒரேநாளில் 768 பேர் பலியாகினர். இதனால் அங்கு வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியது.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியது. இந்நிலையில் நேற்றுக் காலை 9 மணி நிலவரப்படி 28 இலட்சத்து 26 ஆயிரத்து 847 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 18 லட்சத்து 48 ஆயிரத்து 610 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



வைரஸ் பரவியவர்களில் 7 இலட்சத்து 81 ஆயிரத்து 256 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரஸுக்கு இதுவரை ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 981 பேர் பலியாகினர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுத்து வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸுக்கு அடுத்தபடியாக கொரோனா தற்போது இங்கிலாந்தில் நிலை கொண்டுள்ளது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, இங்கிலாந்தில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 464 பேருக்கு வைரஸ் பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிதாக 5 ஆயிரத்து 386 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் 768 பேர் பலியாகினர். இதனால் அந்நாட்டில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 19 ஆயிரத்து 506 ஆக அதிகரித்தது.

இங்கிலாந்தில் கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியதால் அந்நாட்டு மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். (இ)

# 27 ஆயிரம் இலங்கையர்கள் நாடு திரும்பக் கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள சுமார் 27 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு கோரிக்கை விடுத்துள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்தது.

மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்புக்களை இழந்து சிரமங்களை எதிர்கொண்டுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு சிறப்புத் திட்டம் மேற்கொண்டுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சகம் தெரிவித்தது.

அதன்படி, தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அவர்களை வழிநடத்தும் சாத்தியத்தின் அடிப்படையில், விருப்பமுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை உலகளாவிய ரீதியிலுள்ள 67 இலங்கைத் தூதரகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் மூலம் அந்தந்த நாடுகளில் தங்க விரும்பும் இலங்கையர்களுக்கு உதவவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சகம் மேலும் தெரிவித்தது. (இ)

# அமெரிக்க மாகாணங்களை புரட்டிப்போட்ட புயல்!

## 7 பேர் பலி, 100 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

கொரோனா பாதிப்புக்கு இடையே மேலும் ஒரு சோக நிகழ்வாக அமெரிக்க மாகாணங்களை சக்தி வாய்ந்த புயல் புரட்டிப்போட்டது. இதில் 7 பேர் பலியாகினர்.

கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில், அமெரிக்கா முதல் இடத்திலுள்ளது. அங்கு கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையும் அந்தக் கொடிய வைரஸால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கில் அதிகரித்து வருகின்றன.

கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் ஏற்கனவே நிலை குலைந்துள்ள அமெரிக்காவை இயற்கைப் பேரிடர்களும் தங்கள் பங்குக்குத் திணறடித்து வருகின்றன. கடந்த வாரம் அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களைச் சக்தி வாய்ந்த புயல் புரட்டிப் போட்டது.

மிசிசிப்பி, டெக்சாஸ், அலபாமா, லூசியானா ஆகிய மாகாணங்களைப் புயல் தாக்கியதைத் தொடர்ந்து, கனமழை கொட்டியதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. புயல் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 26 பேர் பலியாகினர்.

இந்தப் பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டு வருவதற்குள் அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களை கடந்த 23 ஆம் திகதி புயல் கடுமையாகத் தாக்கியது. ஒக்லஹோமா, டெக்சாஸ் மற்றும் லூசியானா ஆகிய மாகாணங்களில் மணிக்கு 144 மீற்றர் வேகத்தில் புயல் காற்று சுழன்றடித்தது.

இந்தப் புயலில் சிக்கி நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது.

மேலும் மின்கம்பங்கள் சரிந்து விழுந்து, மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் இருளில் மூழ்கின. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

இதனிடையே, புயல் மற்றும் சூறாவளியைத் தொடர்ந்து, மேற்கூறிய 3 மாகாணங்களிலும் இடைவிடாது கனமழை கொட்டியது. பல இடங்களில் பெரியளவில் ஆலங்கட்டி மழை பெய்ததாகவும் தெரிய வருகிறது.

கனமழையால் நீர்நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்தது. வீதிகளில் வெள்ளம் கரைபுரண்டோடியது. 3 மாகாணங்களில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

புயல் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 2 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பலர் மாயமாகியுள்ளனர்.

புயல் பாதித்த பகுதிகளில் மீட்புக் குழுவினர் குவிக்கப்பட்டு முழு வீச்சில் பணிகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற்போது வரை அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களை 12 புயல்கள் தாக்கியதும், இதில் 76 பேர் பலியானதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கொடிய கொரோனா வைரஸால் தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் கொத்துக் கொத்தாக செத்து மடிந்து வரும் நிலையில் புயல், சூறாவளி போன்ற இயற்கைப் பேரிடர்களால் மக்கள் உயிரிழப்பது அமெரிக்காவில் மேலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)



# ஊரடங்கில் தனித்திருத்தல் கழுகு கற்றுத்தரும் பாடம்



கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்ந்து தீவிரமடைந்து வரும் நிலையில், கழுகு தனித்திருத்தல் பற்றி நமக்கு கற்றுத்தரும் பாடம் என்ன என்பதைப் பார்ப்போம்.

கழுகு என்பது அக்சிபிட்ரிடே என்னும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்த, வலுவான பெரிய கொன்று ண்ணிப் பறவையாகும். பறவைகளின் அரசன் என்ற சிறப்புப் பெறுகிறது கழுகு. அதிகாரம், சுதந்திரம், மேன்மை ஆகியவற்றின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

ஆனால், இந்தப் பறவை 40 வயதையடையும்போது ஒரு சவாலைச் சந்திக்கும். அதில் வென்றால், அதற்கு மறுபிறவி கிடைக்கும்.

கழுகுக்கு 40 வயதானவுடன் இரையைக் கொத்தித் தின்னும் அதன் அலகு மழுங்கி வளைந்து விடும். இரையைப் பற்றிக் கொள்ளும் நகங்கள் கூர்மை இழக்கும். அது பறப்பதற்குத் துணை நிற்கும் இறகுகளோ பெரிதாகி பாரமாகி விடும். இதனால், கழுகின் பலம் குறைந்து, முதுமையடையும். இந்த நிலையில், ஒன்று இறப்பது அல்லது வலிமிக்க நிகழ்ச்சிக்குத் தன்னையே உட்படுத்துவது இவை தான் கழுகுக்கு இருக்கும் இரண்டு வாய்ப்புக்கள்.

இந்தக் காலத்தில், கழுகு உயர் ந்த மலைக்குப் பறந்து சென்று அங்கிருக்கும் பாறையில் தன் அலகைக் கொண்டு வேகமாக மோதி அலகை உடைக்கும். புதிய அலகு வளரும் வரை தன் கூட்டி லேயே தனித்திருக்கும். புதிய அலகு வளர்ந்த பின் இறகுகளைத் தானே பிய்த்தெடுக்கும்.

ஐந்து மாதங்களுக்குப் பின், புதிய இறகுகள் முளைக்க ஆரம் பிக்கும். இந்த மாற்றத்துக்குச் சுமார் 150 நாட்கள் ஆகும். அத்தனை நாட்கள் காத்திருந்து, எவர் கண்ணிலும் படாமல் தனியாய்ப் பாறைகளின் இடுக்குகளில் கிடைக்கும் சிறு புழுக்களையும், பூச்சிகளை யும் உண்டு உயிர் வாழும். இவ்வாறு தொடர்ந்து மூன்று மாதங்கள் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு கிடைத்ததை உண்டு உயிர் வாழ்ந்து அது வளர்ச்சி பெறும்.

நான்காம் மாதத்தில் அதன் இறக்கைகள் நீண்டு, நகங்களும், அலகும் கூர்மையாகவும் வளர்ந்து ஓர் இளம் பறவையாக மீண்டும் நீல வானில் சிறகடித்துப் பறக்கும். அதற்கடுத்த முப்பது ஆண்டுகளும் அது வானில் சக்கர வர்த்தியாய் வலம் வரும். மூன்று மாதம் தனித்திருத்தலின் மூலம் தனக்குப் புதியதொரு 30 ஆண் டுகள் காலத்தைத் தனக்காக உருவாக்கிக் கொள்கிறது கழுகு.

கழுகின் வாழ்க்கையிலிருந்து நமக்கு ஒரு பாடம் கிடைத்திருக்கிறது. தனித்திருத்தல் என்பது புதிய வாழ்க்கையின் முதல் அத்தியாயம். அது வலியோடு ஆரம்பித் தாலும் அற்புதமானதொரு புதிய வாழ்க்கையை வகுத்துக் கொடுக்கும். தனித்திருத்தலில் வலிகளை நினைத்துக் கொண்டிருக்காமல், புதிய வழிகளை உருவாக்குவ ருக்குத்தான் அது சாத்தியமாகும்.

கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க நம்மை நாமே தனிமைப்படுத்தி கொள்ளும் வேளையில், மனம் தளராமல் புதிய சிந்தனைகளை வளர்ப்போம். வாழ்க்கையில் புதிய சாதனைகளை படைக்க ஆயத்தமாவோம்.

# தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை கையளிக்க இது பொருத்தமான நேரமல்ல

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பவ்ரல் கடிதம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது காணப்படுகின்ற வைரஸ் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை கையளிப்பதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்று சுட்டிக்காட்டிய பவ்ரல் அமைப்பு, இது தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

பவ்ரல் அமைப்பால் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஏப்ரல் 28 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை கையளிப்பதற்கான இறுதித் தினமாகும் என்று அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் காணப்படுகின்ற நெருக்கடியான நிலைமைக்கு அமைய ஏப்ரல் 28 ஆம் திகதியாகும் போது தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வது மிகவும் ஆபத்தானதாகும் என்பது எமது நிலைப்பாடாகும்.

அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் அதிகாரிகள் பலரால் பரிமாற்றிக் கொள்ளப்படுகின்றன. இவர்களில் ஒருவர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவராகக் காணப்பட்டால் கூட அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றி நாம் அனைவரும் அறிவோம்.

இதேவேளை நாட்டில் தற்போது காணப்படுகின்ற ஆபத்தான நிலைமையில் நாளை திங்கட்கிழமை அனைத்து அரச திணைக்களங்களும் வழமை போன்று இயங்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

அதனால் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை கையளிப்பது அரச அதிகாரிகளுக்கு சிக்கலாக அமையும்.

இந்தக் காரணிகள் பற்றி ஆராய்ந்து தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை கையளிப்பது தொடர்பில் உரிய பாதுகாப்பான தீர்மானத்தை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அக்கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டது. (இ)

# மரம் திடீரென முறிந்து விழுந்ததில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்



(கரணவாய்)
வீதியால் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏழு முப்பது மணி அளவில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ரமேஸ் எனும் பொலிஸ் உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியிலுள்ள ஆலமரம் ஒன்று வீதிக்கு குறுக்காக முறிந்து விழுந்து உள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிள் ஆலமரக் கொப்புக்குள் சிக்கிக்கொண்டது. இதில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தினால் வீதித்தடை ஏற்பட்டபோது அப்பகுதி இளைஞர்கள் சேர்ந்து மரக் கொப்புகளை வெட்டி வீதித்தடையினை அகற்றியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# முல்லை. பிராந்திய சுகாதார பணிப்பாளர் மக்களுக்கு விடுக்கும் அவசர அறிவிப்பு!

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் வெளிமாவட்டத்தினை சேர்ந்தவர்கள் வந்து இருப்பார்களாக இருந்தால் அவர்கள் தொடர்பிலான தகவலை மக்கள் 0212060007 தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் எஸ்.சுகந்தன் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று என அடையாளம் காணப்பட்டுள்ள அபாயவலயங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களிலிருந்து பலர் வடக்கின் பல்வேறு மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள் இவ்வாறானவர்கள் பொதுச்சுகாதாரப் பரிசோதகரிடம் பதிவுகளை மேற்படி கொண்டு கண்காணிக்க ஆவண செய்யவேண்டும் இன்னிலையில் எதுவித பதிவுகளும் இன்றி பலர் வருகை தருகின்றமையினை அவதானிக்க முடிந்தது. இன்னிலையில் மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உங்கள் கிராமத்தில் வெளிமாவட்டத்தினை சேர்ந்தவர்கள் வந்து தங்கி நின்றால் அவர்கள் தொடர்பிலான தகவலை மேற்குறிப்பிட்ட இலகத்திற்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (இ-281)

# ஊரடங்கு தளர்வாகும் நாட்களிலாவது கள் விற்பனைக்கு அனுமதி தாருங்கள்

# முல்லைத்தீவு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் கோரிக்கை




(முல்லைத்தீவு)
ஊரடங்கு தளர்த்தப்படும் நாட்களிலாவது கள் விற்பனைக்கு அனுமதி தாருங்கள் என முல்லைத்தீவு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இதன் போதே அவர்கள் மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்தனர்

இந்த சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர்கள் இந்த சங்கத்தின் அங்கத்தவர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பல்வேறு பாதிப்புகளையும் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்தனர்

குறிப்பாக கள் என்பது ஒரு இயற்கையான ஒரு பானம் இதில் நோய் எதிர்ப்பு சக்திகள் கூட காணப்படுகின்றது இருப்பினும் குறித்த கள் விற்பனை செய்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதன் விளைவாக அவர்களுடைய குடும்பங்கள் மட்டுமன்றி இந்த சங்கத்தினுடைய பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்

கள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ள நிலையில் மிகவும் ஆபத்தான சட்டவிரோத மதுபான உற்பத்திகள் அதிகரித்து வருகிறது குறிப்பாக இந்த ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற நாட்களிலாவது இந்த கள்ளினை விற்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கத்தினுடைய பிரதமர் மற்றும் ஜனாதிபதி அவர்கள் மேற்கொண்டு தரவேண்டும் எனவும் குறிப்பாக இந்த உற்பத்தியை நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரங்கள் இதனூடாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கோரிக்கை விடுத்துள்ளனர்

குறிப்பாக கள் விற்பனை நிலையங்கள் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் காணப்படுவதால் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நாங்கள் விற்பனைகளை மேற்கொள்வோம் என்றும் தங்களுடைய இந்த தொழில் நிறுத்தப்படுவதால் பல்வேறு குடும்பங்களினுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதனால் ஊரடங்கு தளர்த்தப்படுகின்றபோது இந்த கள் விற்பனை நிலையங்களை திறந்து விற்பனை செய்வதற்குரிய அனுமதியை தருமாறும் இவ்வாறு செய்வதன் மூலம் இந்த தொழிலை நம்பி வாழ்கின்றவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் தெரிவித்தனர். (இ-281)

## இராசிபலன்

26.04.2020
சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 12.19 மணிவரை
ரோகினி முன்னிரவு 9.37 மணிவரை
சுப நேரம் 8.59 - 10.29 மணிவரை
இராகு காலம் 4.29 - 5.59 மணிவரை
சந்திராஷ்டமம் - விசாகம்,அனுசம்
அட்சய திருதியை, சதுர்த்தி விரதம்


**மேஷம்** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்,வாக்கு மேன்மை உண்டு.சுப செய்திகள் வந்து சேரலாம்.


**ரிஷபம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்,திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்,தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


**மிதுனம்** பக்குவமாகப்பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்,புதிய நட்புக்கள் இடம்பெறலாம்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,சயனசுகக் குறைவான நாள்.


**கடகம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்,காரிய அனுகூலமுண்டு.


**சிம்மம்** வீட்டை அழகாக்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.


**கன்னி** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்,ரோக பயமுண்டு.


**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது,அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.


**விருச்சிகம்** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கிடைக்கும்,போசன நன்மையுண்டு.


**தனுசு** இனத்தவர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன்பிரச்சினைகளை தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள்,உடல் நலன் சீராகும்,கௌரவமான நாள்.


**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்
பிள்ளைகளின் நலனில் அதிகஅக்கறை காட்டுவீர்கள்.


**கும்பம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்,மனதில் தோன்றுவதை செய்வீர்கள்,நண்பர்களின் சந்திப்புண்டு


**மீனம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

பேராசைக்காரர்களுக்கு கை நீளம்

# வீட்டைத் தாண்டி நீயும் வரக்கூடாது நானும் வரமாட்டேன் - வடிவேலு பஞ்ச்



(சென்னை)

தமிழ் சினிமாவில் முன்னணி நகைச்சுவை நடிகராக இருக்கும் வடிவேலு "வீட்டைத் தாண்டி நீயும் வரக்கூடாது, நானும் வர மாட்டேன்" என்று கூறி மக்களிடையே தனது பாணியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தற்போது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து, தொடர்ந்து விழிப்புணர்வு காணொலிகளை தனது டுவிட்டர் பக்கத்தில் வடிவேலு பதிவிட்டு வருகிறார்.

இந்நிலையில் நடிகர் வடிவேலு தனது டுவிட்டர் பக்கத்தில் புதிய காணொலி ஒன்றை வெளியிட்டார். கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்துக் கொள்ள "வீட்டைத் தாண்டி நீயும் வரக்கூடாது, நானும் வர மாட்டேன்" அது கோடு, இது ரோடு என வழக்கம் போல தனது பாணியில் நகைச்சுவையாகக் கூறினார்.

மேலும், இந்த நேரத்தில் மருத்துவர்கள் தான் கடவுள், அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும், மனித நேயங்கள் ஒன்று சேரனும், மருத்துவ உலகம் தலையோங்கி நிக்கணும் எனவும் வடிவேலு தெரிவித்தார். (இ)

# இந்தியாவில் மழைக்காலத்தில் கொரோனா மீண்டும் தாக்கும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை



(டில்லி)

கொரோனா வைரஸ் தொற்று நோய், இந்தியாவில் மழைக்காலத்தில் மீண்டும் தாக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

கொரோனா வைரஸை ஒழித்துக்கட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து உலகமெங்கும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இந்த வைரஸ் இந்தியாவையும் விட்டுவைக்காமல், ஊரடங்குக்கு மத்தியிலும் அடங்காமல் பரவி வருகிறது. தினந்தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த வைரஸின் பிடியில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

கொரோனா வைரசின் முதல் தாக்குதல் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த நிலையில் அடுத்த தாக்குதல் பற்றியும் விஞ்ஞானிகள் எச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். கொரோனா வைரஸின் இரண்டாவது அலைகள், ஜூலை மாத கடைசியில் அல்லது ஓகஸ்டு மாதம் மழைக்காலத்தில் வந்து தாக்கும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இதையொட்டி உத்தரபிரதேச மாநிலம் தாத்ரி நகரத்திலுள்ள ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தின் கணிதவியல்துறை பேராசிரியர் சமித் பட்டாச்சாரியா தெரிவிக்கையில்,

தினமும் புதிது புதிதாக பலரையும் கொரோனா வைரஸ் தாக்கி வந்து, ஒரு உச்சத்தை எட்டியுள்ளது. இது இனி சரிவடையும். ஆனாலும் அடுத்த சில வாரங்களில் அல்லது மாதங்களில் கூட அது மீண்டும் வந்து தாக்கும்.

இரண்டாவது அலை என்பது ஜூலை மாதத்தின் இறுதியில் அல்லது ஓகஸ்டு மாதத்தில் மழைக்காலத்தில் திரும்பி வரலாம். அதன் தாக்குதல் என்பது நாம் எந்தளவுக்கு சமூக இடைவெளியைப் பின்பற்றுகிறோமோ, அதைப் பொறுத்துத்தான் அமையும்.

கடந்த சில நாட்களில் புதிய நிகழ்வுகளைப் பார்க்கிறபோது, இதற்கு முன்பு இருந்ததை விட இப்போது புதிதாக கொரோனா வைரஸ் தொற்று பரவுவது சற்றே மெதுவாகத்தான் நடக்கிறது. இது நாம் உச்சத்தைத் தொட்டு வந்துவிட்டோம் என்பதை காட்டுவதாக இருக்கலாம்.

சீனாவிலும் ஐரோப்பாவிலும் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள், ஏற்கனவே கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மீண்டவர்களை மீண்டும் தாக்கக்கூடும் என்று காட்டுகின்றன. எனவே முந்தைய நோய்த்தொற்றானது, .ரண்டாவது நோய்த்தொற்றுக்கு எதிராக எதிர்ப்புச்சக்தியைப் பெற உதவும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. (அதாவது ஒரு முறை கொரோனா வைரஸ் தாக்கியவர்களுக்கு மீண்டும் தாக்காது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.)

எனவே ஒட்டுமொத்த மக்களும் இரண்டாவது அலைக்கு ஓரளவு பாதிக்கக்கூடும்.

உலக சந்தையில் தடுப்பூசி வருகிறவரையில், நாம் விழிப்புணர்வுடன் இருந்தாக வேண்டும். நாட்டில் அங்கும் இங்குமாய் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தாக்குகிறபோது, அந்தப் பகுதியை, உள்ளூர் அளவில் நாம் தனிமைப்படுத்த வேண்டும் அல்லது சமூக இடைவெளியைப் பின்பற்ற செய்ய வேண்டும். மேலும் அடையாளம் காண சோதனைகளைச் செய்ய வேண்டும். அறிகுறிகளைப்பார்க்காமல் சோதனைகளை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தை பெங்களூருவிலுள்ள ஐ.ஐ.எஸ்.சி. என்னும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் ராஜேஷ் சுந்தரேசனும் உறுதி செய்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில்,

நாம் இயல்பான வாழ்க்கை முறைக்கு திரும்புகிறபோது, கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்குதல் மீண்டும் வர வாய்ப்பு இருக்கிறது.

பயணக்கட்டுப்பாடுகளை ஓரளவுக்குத் தளர்த்திய பின்னர் சீனா இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

தற்போது நாம் ஊரடங்குக் காலகட்டத்தில் இருக்கின்றோம். இது நமக்கு உரியகால அவகாசத்தைத் தந்துள்ளது. இந்த நேரத்தில் நாம் சோதனைகளைச் செய்ய வேண்டும். பாதிப்புக்குள்ளானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். தனிமைப்படுத்த வேண்டும்.

சிறப்பான சுகாதாரத்தைப் பின்பற்ற வேண்டும். தடுப்பூசியை கண்டுபிடிக்க வேண்டும். நாம் எப்படியும் இவற்றைச் செய்தாக வேண்டும். இவை செய்யப்படுகின்றன.

எப்போது, எப்படி ஊரடங்கை விலக்கிக்கொள்ளப்போகின்றோம் என்பது கடினமான முடிவாக அமையும். இது பல கட்டங்களாக அமையப்போகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

பொதுச் சுகாதாரத்தை மதிப்பிடுவதற்கு முடிவு எடுப்பவர்களுக்கு உதவுகிற கருவிகளை கொண்டு வருவதில், எங்கள் குழு கவனம் செலுத்துகிறது.

மழைக்காலத்தில் நமது நாட்டில் பல இடங்களில் காய்ச்சல் பரவும். எனவே காய்ச்சல் அறிகுறிகளை நாம் கண்டுகொள்ளாமல் விட்டு விடக்கூடாது.

அறிகுறிகளைப் பற்றிக் கவலைப்படாமல், தீவிரமாகப் பரவிய இடங்களில் நாம் சோதனைகளை அதிகரிக்க வேண்டும். பாதிப்புக்குள்ளானோரை அடையாளம்காண வேண்டும். அப்போது தான் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாக பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

இப்போது குறிப்பிடத்தக்க வகையில் கொரோனா வைரஸ் பரவலைக் கண்டுபிடிக்க சோதனைகள் நடந்து கொண்டிருக்கலாம்.

மக்கள் தங்கள் சுகாதாரம் குறித்து மிகவும் கவனமாக இருப்பதால் நடத்தை மாற்றங்கள் இருக்கலாம்.

முகக்கவசங்கள் அணிவது பொதுவானதாகி விடலாம். இதெல்லாம் இரண்டாவது அலை தாக்குகிறபோது அதை கட்டுப்படுத்த உதவலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (.)

# பிரசவ வலியில் துடித்த பெண் உதவி செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் பெயரை குழந்தைக்கு வைத்த தம்பதி

(டில்லி)

டில்லியில் உரிய நேரத்தில் பிரசவ வலியில் துடித்த கர்ப்பிணிப் பெண்ணை வைத்தியசாலைக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் தனது காரில் அழைத்துச் சென்றார். இதையடுத்து உதவி செய்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பெயரை பிறந்த குழந்தைக்கு தம்பதியர் வைத்தனர். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு முழுவதும் மே 3ஆம் திகதி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளிலேயே இருக்க அறிவுறுத்தப்பட்டனர்.

இந்நிலையில் தலைநகர் டில்லியில் அம்புலன்ஸ் வரத் தாமதமானதால் பிரசவ வலியில் துடித்த கர்ப்பிணிப் பெண்ணை ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் தனது காரில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். இந்த உதவியை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தங்களுக்குப் பிறந்த குழந்தைக்கு உதவி செய்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பெயரையே சூட்டினர்.

தலைநகர் டில்லியின் வசீர்பூர் பகுதியில் விக்ரம் மற்றும் அனுபா என்ற தம்பதிகள் வசித்து வந்தனர். நிறைமாத கர்ப்பிணியான அனுபாவுக்கு கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் திடீரென பிரசவவலி ஏற்பட்டது.

இதனால் விக்ரம் உடனடியாக அம்புலன்ஸுக்கு தகவல் கொடுத்தார். ஆனால் அம்புலன்ஸ் வரத் தாமதமானது. இதையடுத்து தனது குடியிருப்பு பகுதிக்கு உட்பட்ட அசோக் விஹார் பொலிஸ் நிலையத்திற்குத் தொடர்பு கொண்டு நிலைமையை எடுத்துக் கூறினார்.

அவர் கொடுத்த தகவலையை அடுத்து பொலிஸ் நிலைய த்தில் பணியிலிருந்த பொலிஸ் அதிகாரிகள் கான்ஸ்டபிள் தயவீர் (வயது-31) என்பவரை தம்பதியருக்கு தேவையான உதவிகளைச் செய்யுமாறு அறிவுறுத்தினர்.

இதையடுத்து உடனடியாக அருகிலிருந்த தனது வீட்டிற்கு சென்ற தயவீர் தனது சொந்தக் காரை எடுத்துக்கொண்டு விக்ரம்-அனுபா தம்பதியினரின் வீட்டிற்கு விரைந்து சென்றார். அங்கு பிரசவ வலியில் துடித்த அனுபாவை தனது காரில் ஏற்றிக்கொண்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்திலேயே அனுபாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. தாயும், குழந்தையும் தற்போது நலமுடன் உள்ளனர்.

இந்நிலையில் பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருந்த அனுபாவை உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குத் தனது சொந்தக் காரில் அழைத்துச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் உதவியை நினைவு கொள்ளும் விதமாக தங்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு விக்ரம் - அனுபா தம்பதியர் தயவீர் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். (இ)

# ஜப்பானில் 13 ஆயிரத்தைத் தாண்டியது கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை

(டோக்கியோ)

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸால் ஜப்பானில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதில் 712 பேர் தலைநகர் டோக்கியோ அருகே யோகோஹாமா துறைமுகத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தி நிறுத்தி வைக்கப்பட்ட 'டைமண்ட் பிரின்சஸ்' கப்பலில் உள்ளவர்கள் ஆவர்.

அங்குள்ள நாகசாகி துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட இத்தாலிய கப்பலில் புதிதாக 43 பேருக்கு வைரஸ் தொற்று உறுதியாகியது.



இதன்மூலம் அந்தக் கப்பலில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 90-ஐ தாண்டிவிட்டது. இந்த வைரஸ் பிடியில் சிக்கி இதுவரை 340 இற்கும் அதிகமானோர் பலியாகினர்.

மேலும் 263 நோயாளிகள் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வைரஸ் பாதிப்பிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைத் தாண்டியது குறிப்பிடத்தக்கது. (இ)

# உலகளவில் பாதிப்பு அதிகரிப்பு 30 இலட்சத்தை நெருங்கும் கொரோனா






உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தை வேகமாக நெருங்கி நெருங்கியது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவியுள்ள இந்த வைரஸ் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இந்நிலையில் உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை நேற்று நண்பகல் 28 இலட்சத்து 33 ஆயிரத்து 50 ஆக அதிகரித்தது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 18 இலட்சத்து 29 ஆயிரத்து 861 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுவர்களில் 58 ஆயிரத்து 368 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

இந்தக் கொடிய வைரஸுக்கு இதுவரை ஒரு இலட்சத்து 98 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். கொரோனா வைரஸ் அதிகம் பரவியுள்ள

**நாடுகளின் விபரங்கள்**

அமெரிக்கா - 9,03,775
ஸ்பெயின் - 2,19,765
இத்தாலி - 1,92,994
பிரான்ஸ் - 1,59,828
ஜெர்மனி - 1,54,159
இங்கிலாந்து - 1,43,464
துருக்கி - 1,04,912
ஈரான் - 88,804
சீனா - 82,804
ரஷியா - 68,622
பிரேசில் - 51,073
பெல்ஜியம் - 44,551
நெதர்லாந்து - 36,535
சுவிட்சர்லாந்து - 28,677
இந்தியா - 24,452
போர்த்துக்கல் - 22,797
ஈக்குவடோர் - 22,719
பெரு -21,648

என்பனவாகும். (இ)

# பாடசாலைகள்,பல்கலைக்கழகங்கள் திறப்பதை ஒத்திவைக்க வேண்டும்

## அரசிடம் மாவை வலியுறுத்து



உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சைகள், தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பன ஓகஸ்ட்டில் நடைபெறும் என்றும், மே 11 ஆம் திகதி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும் என்றும் உயர்கல்வி,கல்வி அமைச்சுக்கள் அறிவித்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடனும் நேற்றுக் காலை கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுடனும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் திறப்பது பற்றியும் விரிவாகப் பேசியிருந்தார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ், ஊரடங்கு நிலைமைகள் பற்றியும் விபரங்களைக் கேட்டறிந்தனர்.

இளம் சமூகத்தினர் குறிப்பாக மாணவர் சமூகம் இரவு பகலாக உலகம் முழுவதும், இலங்கையிலும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பற்றி இணையத்தளங்கள், பத்திரிகைகள், செய்திகள் நாள் முழுவதும் கேட்பதும், பார்ப்பதும் முழுநாள் நிகழ்ச்சியாக இருக்கிறது.

உளவியல் ரீதியாக மாணவர் சமூகம் நிச்சயம் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையே இருக்கிறது.

தற்பொழுது கொரோனா வைரஸ் நாடு முழுவதும் தீவிரமாகப் பரவி வருகிறது. ஊரடங்கு நடைமுறைகள் தொடர்கின்றன.

மருத்துவத்துறை நிபுணர்கள், அமைப்புக்கள் வற்புறுத்துகின்ற ஆலோசனைகளைப் பொருட்படுத்தாமல், ஜனாதிபதியும் அரசும் ஊரடங்கு நடைமுறையை விலக்குவதும், எதிர்மாறான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதும் நாட்டில் ஒரு செயற்கையான சூழ்நிலைகளை உருவாக்கி கொரோனா வைரஸ் பரவு வதைக்கட்டுப்படுத்தி விட்டோம் என்று பெருமைப்படுகின்றனர்.

அதன் மூலம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தருணம் வந்தவிட்டது என்ற ஒரு மாயையை மக்களிடம் ஏற்படுத்துகின்றனர். இந்த அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் இப்பொழுது குறுகிய காலத்துக்குள் நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமடைந்து மக்களிடமும், இளம் சமூகத்திடமும் பெரும் அச்சத்தையே ஏற்படுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் தீவிரத் தொற்றுக் காரணமாக அனைவரும் பெரும் அச்சம், ஆபத்தை அடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வரும் இராணுவத்தினரிடையேயும் கடற்படையினரிடமும் கொரோனா வைரஸ் பரவிவிட்டது.

இந்நிலைமையில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் திறக்கப்படுவதையும் மாணவர்களுக்கான பரீட்சைகள் நடாத்துவதையும் ஒத்திவைக்க வேண்டும். இவ்வாண்டு இறுதி வரை மருத்துவ நிபுணர்களின் ஆய்வுகள், அறிவுறுத்தல்களை அறிந்து பின்பற்றி கல்வி நிறுவனங்களை ஆரம்பிப்பதையும் பரீட்சைகளையும் மேற்கொள்ளலாம்.

கல்வி நிபுணர்கள், தமிழர் ஆசிரிய அமைப்புக்கள் பரீட்சைகளைப்பிற் போடும்படியே கேட்டுள்ளனர். அவர்களுடனும் கூடி ஆராய்ந்து பொருத்தமான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று கல்வி அமைச்சர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். அமைச்சர்களும் இவ்வேண்டுகோளை ஏற்று இணக்கம் தெரிவித்தனர்.

முதலில் 2020 மே மாதம் முதல் ஓகஸ்ட் மாதத்திற்கு இடையே பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், சிறுவர் பள்ளிகள், கல்விக் கட்டமைப்பிலுள்ளோர் மட்டத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் குழந்தைகளிடத்திலிருந்தே கொவிட்-19 வைரஸ் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுவதும் அவசியமானதாகும் என வற்புறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஒரே நேரத்தில் இரட்டை நோய் தாக்குதலில் சிக்கிய சிம்பாவே

(ஹராரே)

சிம்பாவேயை ஒரே நேரத்தில் மலேரியாவும் கொரோனாவும் தாக்கி வருகின்றன.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாவே கடந்த 10 ஆண்டுகளாகவே கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

சுமார் 1.50 கோடி மக்கள் தொகையைக்கொண்ட சிம்பாவேயில் தற்போது மலேரியா நோய் வேகமாகப் பரவி வருகிறது. வழக்கமாக பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் மலேரியா அந்நாட்டை ஒரு கை பார்க்கும். சில ஆண்டுகள் இதன் தாக்கம் சற்றுக் குறைவாகவும் காணப்படும்.

இந்த வருடத்தில் இதுவரை, (அதாவது கடந்த 3 மாதங்களில்) இந்நோய்க்கு 153 பேர் பலியாகினர். மேலும் 1.35 இலட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். எனவே மலேரியாவால் உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கொரோனா வைரஸ், சிம்பாவேயை அச்சுறுத்தத் தொடங்கியிருக்கிறது. அங்கு தற்போதுவரை கொரோனா அதிகமாகப் பரவவில்லை. இனி வேகமாகப் பரவலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இதுவரை சிம்பாவேயில் கொரோனாவால் 28 பேர் பாதிக்கப்பட்டும் 3 பேர் உயிரிழந்தனர்.

முன்னதாக, உலக சுகாதார நிறுவனம் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி எமர்சன் மாங்காக்வா, மார்ச் மாத இறுதியில் 3 வார கால ஊரடங்கு உத்தரவைப்பிறப்பித்தார்.

கடந்த 19 ஆம் திகதி முதல் மேலும் இரு வாரங்களுக்கு ஊரடங்கை அவர் நீட்டித்தார். இதன் காரணமாக ஒரு கோடி மக்கள் வேலையை இழந்து வருமானமின்றி பட்டினி கிடக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் அதிக உயிர்ப்பலி வாங்கப்போவது வறுமையா? மலேரியாவா? கொரோனாவா? என்ற அச்சத்தில் சிம்பாவே மக்கள் உறைந்துபோயுள்ளனர்.(இ)

# கசிப்புடன் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 24 லீற்றர் கசிப்பு மற்றும் அதனைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். இதேவேளை மதுபானசாலைகள் பூட்டப்பட்ட நிலையில் கசிப்பு உற்பத்தி ஆங்காங்கே அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-101)

# பொதுச் சுகாதார அதிகாரிக்கு கொரோனா

பொதுச் சுகாதார அதிகாரி ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று முன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கையில் பதிவான 416 ஆவது கொரோனா தொற்றாளராக இவர் அடையாளம் காணப்பட்டார்.

கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ருவான் விஜேமுனி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் கொவிட் - 19 தொற்றுக்குள்ளான மேலும் இருவர் பூரண குணமடைந்தனர்.(இ)

# உலருணவு வழங்கல்



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தீவகம்வேலணைப்பிரதேசத்திலுள்ள 9 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 1850 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் புலம்பெயர் தேசத்தில் வசித்து வரும் வேலணை உறவுகளின் நிதிப்பங்களிப்பிலும் வேலணை விடிவெள்ளி அமைப்பின் ஏற்பாட்டிலும் வழங்கப்பட்டன.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக வறுமையை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக தொழில்வாய்ப்புக்கள் இன்றி அல்லல்படும் நல்லூர், கோப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, வேலனை போன்ற பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட 1000 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபாய்பெறுமதியான உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.




கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவின் மாவடிச்சேனை ஜிப்ரி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாவடிச்சேனை கிராமத்தில் வாழும் 1100 குடும்பங்களுக்கு தேவையான அத்தயாவசிய உலர் உணவுப் பொதிகள் வீடு வீடாக சென்று நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. மாவடிச்சேனை கிராமத்தில் வாழும் அதிக குடும்பங்கள் தினக்கூலிகளாகக் காணப்படுவதுவதுடன், வருமான இழப்பு காரணமாக அன்றாட உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதிலும் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



படம்—கலகுடா செய்தியாளர்

# நீர்ப்பாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்து முதியவர் உயிரிழப்பு





(வவுனியா)

வவுனியா, பாரதிபுரம் பகுதியில் நீரபாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில்மேலும்தெரிய வருகையில்

வவுனியா, பாரதிபுரம் வீதியில் தற்காலிகமாக வசிக்கும் முதியவர் ஒருவர் வீட்டில் இருந்து இரவு தங்குவதற்காக கற்பகபுரம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டிற்கு துவிச்சக்கர வண்டியில்பயணித்த போது மன்னார் பிரதான வீதிக்கு அண்மித்ததாக பாரதிபுரம் வீதியின் ஓரமாக பேராறு நீரபாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழி ஒன்றில் துவிச்சக்கர வண்டியுடன் வீழ்ந்து, குழியில் தேங்கி நின்ற மழை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

காலை வீதியால் சென்றவர்கள் குறித்த குழியில்ஒருவர்வீழ்ந்து இறந்து கிடப்பதை அவதானித்து வவுனியா பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதில் ஜெயபத்ம புலேந்திரன் என்ற 68 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளதாக தெரியவந்தது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பற்ற நடவடிக்கையே இந்த அசம்பாவிதம் இடம்பெறக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-250-299)

# சுகாதாரத் துறை பாதுகாப்புத் துறையினருக்கு நன்றி தெரிவித்து வவுனியாவில் பதாதைகள்





(வவுனியா)

கொரோனாத் தொற்றிலிருந்து எமது தாய்நாட்டு உயிர்களை பாதுகாப்பதற்காக தன்னலமற்ற சேவையினை வழங்கும்சுகாதார துறையினர், முப்படையினர், காவல்துறையினர் மற்றும் ஏனைய துணைப்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளி லும்பதாதைகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

நன்றி தெரிவிக்கும் பதாதைகள் வவுனியா புதிய பேருந்து நிலையம், மணிக்கூட்டுச்சந்தி, வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பதாதைகளுக்கு வவுனியா பத்தினியார், மகிழங்குளம், ஓயார், சின்னக்குளம் பகுதி கிராம மக்கள் மகிந்தோய தொண்டர் படையணி மற்றும்கொரோனா நலன்புரிவிழிப்புணர்வு பிரச்சாரக்குழுவினர் உரிமை கோரியுள்ளனர். (இ-250)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2021 facebook

**தனம்**


நாம் வறுமையில் விழுந்த பின்பும் தெரிந்த நாய்கள் வாலாட்டத்தான் செய்கின்றன.



சில மனிதர்கள் தான் முகத்தை திருப்பி கொள்கின்றார்கள்

**ராசன்**

என் புருசனோட சண்டை போடவே பயமா இருக்கு ஏன் அடிச்சிடுவாரா?



சே சே சமைக்கும் போது உப்பு காரத்தை அதிகமா போட்டு பழி வாங்குது

**கௌசல்யா**

நேத்து பூரா வீட்ல நெட் வேல செய்யலடி

அப்படியா? அப்றம் என்னதான் பண்ணினேடி

வேற என்ன தான் பண்ணுறது என் husband கூடதான் பேசிக்கிட்டு இருந்தன். பாவம் நல்லவரா தெரியுறாருடி

**விஜயா**

காலைல 5 மணிக்கு எழுப்பி விடு எதுக்குங்க?




புரண்டு படுக்கனும்

**தேவா**

வாழ்க்கை கற்றுக்கொடுப்பது ஒன்று தான்
வெறுப்பவர்களை தேடாதே..
விரும்பியவர்களை வெறுக்காதே..



**பரமு**



பிறரோடு ஒப்பிடாத வரை எல்லாமே அழகு தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.